ப்ரவாகம்

# ஷரந்தீபிலிருந்து மஹ்மூத் ஸமி அல் பருதி

பண்ணாமத்துக்கவிராயர்

ப்ரவாகம் வெளியீட்டகம்
சுதந்திர கலை இலக்கியப் பேரவை.
இல-09, மாத்தளை வீதி,
உக்குவளை 21300

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷரந்தீபிலிருந்து
# மஹ்மூத் ஸமி அல் பரூதி

- பண்ணாமத்துக்கவிராயர் -

ப்ரவாகம் வெளியீட்டகம்
சுதந்திர கலை இலக்கியப் பேரவை
இல-09, மாத்தளை வீதி
உக்குவளை 21300

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்ரவாகம் வெளியீடு 2

# ஷரந்தீபிலிருந்து மஹ்மூத் ஸமி அல் பரூதி
(மொழியாக்கக் கவிதை)

© பண்ணாமத்துக்கவிராயர்



| | | |
|---|---|---|
| முதற்பதிப்பு | : | 2002 ஜனவரி |
| அட்டை, கணனி வடிவமைப்பு | : | M. பஸீல் |
| அச்சகம் | : | பெரடைஸ் கிரபிக்ஸ் |
| விலை | : | 50/= |



# Serandibilirunthu
# Mohamed Sami Al-Barudhi
(Translation)

© Pannamathuk Kavirayar



| | | |
|---|---|---|
| First Edition | : | 2002 |
| Publishers | : | Pravagam<br>"Suthanthira Kalai Ilakkiya Peravai"<br>09, Matale Road, Ukuwela. |

ISBN 955-97597-0-1


மர்ஹூம் எச். எம். பி. முஹிதீன்
நினைவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை

ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட தல் அல் கபீர் வீரர் அரபி பாஷாவும் அவரது தோழர்களும் எகிப்திலிருந்து நாடுகடத்தப்பட்டு இலங்கை மண்ணில் கால் பதித்தமையும்,

இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் மறுமலர்ச்சித் தந்தை அறிஞர் சித்திலெப்பை முன்னெடுத்த கல்விச் சமூகச் சீர்திருத்தப் பணி அரபியின் வருகையால் உத்வேகம் பெற்றமையும்,

சுமார் இரு தசாப்தங்கள் இலங்கையில் நீடித்த தீவாந்திர வாசத்தின் போது, அரபி பாஷா சித்திலெப்பைக்குப் பக்கபலமாக நின்றுதவி முஸ்லிம் கல்வி வளர்ச்சிக்காக அரும் பங்காற்றியமையும்,

நாமறிந்த சேதிகள். எனினும்,

அஹ்மத் ஒறாபி அல் மிஸ்றி என்ற அரபி பாஷாவை அறிந்த அளவுக்கு அரபியுடன் இலங்கையில் தீவாந்திரவாசம் புரிந்த மற்றொரு மகத்தான ஆளுமையான மஹ்மூத் ஸமி அல் பரூதி பற்றி நாம் அதிகம் அறிந்திருக்கவில்லை.

பிரிட்டிஷ் குடியேற்ற நாடாக விளங்கிய இலங்கையில், கலோனியல் அரசாங்கத்தின் தீவிர கண்காணிப்பில் அரசியல் அஞ்ஞாதவாசம் புரிய நேர்ந்த இவர்கள் தம்மை அதிகம் முன்னிறுத்தாமலும், அதேவேளை சமூகத்திலிருந்து முற்றாக ஒதுங்காமலும் இங்கு வாழ்ந்ததாகவும், ஆங்கிலேயருக்குத் தொல்லை கொடாத ‘நல்ல பிள்ளை’ களாகவே அவர்கள் தீவாந்திரவாசம் கழிந்ததாகவும் வரலாறு பதிவு செய்துள்ளது.

தேசம் பிரஷ்டம் காரணமாக ஆர்ப்பாட்டங்களும், நெருக்கடிகளும் மலிந்த அரசியல் வாழ்விலிருந்து துண்டிக்கப்பட்டு மஹ்மூத் ஸமி அல் பரூதி எமது மண்ணில் வாழநேர்ந்த காலப் பகுதியில் எண்ணற்ற அரபிக் கவிதைகளைப் படைத்துள்ளதாக அறிகிறோம்.

அவற்றுள் ஒன்றே இந்நூலில் மொழியாக்கம் பெற்றுள்ள நெடுங்கவிதை.

பெருங்கவிஞர் மஹ்மூத் ஸமி அல் பரூதியைத் தமிழ் வாசகர்க்கு அறிமுகப் படுத்தும் முயற்சியே இச்சிறு வெளியீடு.

உக்குவளை அக்ரம்
சுதந்திர கலை இலக்கியப் பேரவை



## மஹ்மூத் ஸமி - அல் பரூதியும் அரபிப் புரட்சியும்

### சில குறிப்புகள்.

‘அரபிப் புரட்சி’ என வரலாற்றில் பதிவாகியுள்ள வத்தனியூன்களின் கலகம் முறியடிக்கப்பட்டு, எகிப்திலிருந்து வெளி யேற்றப்பட்ட அஹ்மத் ஒறாபி அல் மிஸ்றி என்ற அரபி பாஷாவுடன் 1883 ஜனவரி 10ந் திகதி இலங்கை மண்ணில் கால்வைத்த அவரது சகாக்களில் ஒருவர் தான் நவீன அரபிலக்கிய முன்னோடிகளில் ஒருவராகக் கருதப்படும் மஹ்மூத் ஸமி அல் - பரூதி (1839 - 1904). மற்றொருவர் தமது இலங்கை வாசத்தின் போது, ‘அல் பஹ்ர் அஸ்ஸாகிர்’ என்ற வரலாற்று நூலை நான்கு தொகுதிகளாக எழுதிய பொருளியல் அறிஞர் மஹ்மூத் ஃபஹ்மி. இலங்கையில் அடைக்கலம் புகுந்த அரபியின் ஏனைய தோழர்கள் அப்துல் ஆல் ஹில்மி, அலி ஃபஹ்மி, யாக்கூப் ஸமி, துல்பா இஸ்மத். இவர்கள் அனைவரும் பாஷாக்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் எகிப்தில் உண்டான எழுச்சியோடும், கல்விச் சீர்த்திருத்தப் பணிகளோடும் பெரிதும் சம்பந்தப்பட்டிருந்த மஹ்மூத் ஸமி - அல் பரூதி ஓர் பெருங் கவிஞர். இராணுவத் தளபதி, இராஜதந்திரி, விடுதலைப் போராளி, எகிப்தின் தேசிய அரசாங்கத்தில் இராணுவ அமைச்சராகவும் புரட்சி அரசாங் கத்தில் பிரதமராகவும் கடமையாற்றியவர். மிதவாதப் போக்குக் கொண்ட ஷெரீஃப் பாஷா வின் ஆதரவாளராய் அரசியலில் பிரவேசித்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் அரபி பாஷாவின் புரட்சித் தலைமையை ஏற்று இறுதிவரை அரபியுடன் விடுதலைப் போராட்டத்துக்கு விசுவாசமாய் நின்றவர் அல் பரூதி.

கொழும்பிலும், கண்டியிலும் தீவாந்திர வாசத்தைக் கழித்த பரூதி அந்திமக் காலத்தில் கண்பார்வை இழக்கத் தொடங்கி, கெதிமின் மன்னிப்பு கிடைத்ததும் 1899 ஒக்டோபர் 29 ல் எகிப்து திரும்புகிறார். 1904ம் ஆண்டு தாயக மண்ணில் இன்னுயிர் நீத்த பரூதியின் கவிதைகள், அவரது மறைவுக்குப் பின் நான்கு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. அப்பாசியக் கால அரபுக் கவிதைகளில் சிறந்தவற்றைத் தொகுத்தமையும் இவரது இலக்கியப் பங்களிப்பு களில் ஒன்றாகும்.

ஸய்லான், ஷரந்தீப் என நம் முன்னோர் போற்றிய இலங்கையில் தீவாந்திரவாசம் புரிகையில் அல்பரூதி எழுதிய எண்ணற்ற அரபுக் கவிதைகளில் ஒன்றே இங்கு ஆங்கிலம் வழியாகத் தமிழில் மொழியாக்கம் பெற்றுள்ள கஸீதா. 1974 மே மாதம் தினகரன் முஸ்லிம் மலரிலும், 1975.6.6ல் கல்பனாவிலும் பிரசுரமான இம்மொழியாக்கம் ஒரு சில திருத்தங்களுடன் இங்கு நூல்வடிவம் பெற்றுள்ளது.

நாட்டுப்பற்று, விடுதலை வேட்கை, பிறந்த மண்ணை உற்றார் உறவினரை நண்பர்க ளைப் பிரிந்த சோகம், ஆற்றாமை முதலிய உணர்ச்சிகளின் வெளிப்பாடான இந்நெடுங் கவிதை அரபிப் புரட்சியைப் பின்புலமாகக் கொண்டுள்ளதால் அப்புரட்சி பற்றிய சில வரலாற்றுக் குறிப்புகள் இங்கே.



வலிமையிழக்கத் தொடங்கிய உதுமா னிய துருக்கிப் பேரரசுக்கு உட்பட்டிருந்த எகிப்தில் பரம்பரை ஆட்சியாளரான கெதீம், பெயரளவில் ஆட்சிபீடத்திலிருக்க, அதிகாரங்கள் யாவும் ஏகாதிபத்திய சக்திகளின் கரங்களில் குவிகின்றன. எகிப்தில் ஊடுருவியிருந்த பிரிட்டனினதும் பிரான்ஸினதும் ஏகாதிபத்திய நலன்கள் கோரப்பசி கொண்டு ராட்சஸ நகங் களை விரிக்கின்றன. இவ்விரு சக்திகளிடையே மேலாதிக்கப் போட்டிகளும், கழுத்தறுப்பு நடவடிக்கைகளுமே எகிப்தின் சுயாதீனம் ஓரளவு எஞ்சியிருக்கக் காரணம் போல் தோன்றுகிறது.

ஐரோப்பிய ஏஜன்டான அரபுமொழி தெரியாத ஆர்மேனியர் நுபாஷ் பாஷாவின் எகிப்திய அமைச்சரவை 'ஐரோப்பிய மந்திரி சபை' என்றே அழைக்கப்படுகின்றது. அமைச் சரவையின் முழு அதிகாரமும் நிதியமைச்சரான ஆங்கிலேயர் ரிவர்ஸ் வில்சன் வசமிருக்க, பிரெஞ்சு, ஆஸ்திரிய, இத்தாலிய நாட்டுப் பிரதிநிதிகள் அங்கம் வகித்த இவ்வமைச் சரவையில் வில்சன், பாரிங் (கிறோமர் பிரபு) இருவரதும் அடிவருடியான றியாஸ் பாஷா உள்துறை அமைச்சராயிருக்கின்றார்.

ஐரோப்பிய கடன், ஐரோப்பிய முதலீடு எனப் பல்வேறு வடிவங்களில் ஏகாதிபத்திய ஒடுக்குமுறை கடைவிரிக்கவும் பொருளாதார அடிமை நுகத்தடியில் சிக்கி எகிப்து மூச்சு திணறுகின்றது. எகிப்திய சமூகத்தின் எல்லாப் பகுதியினர் மத்தியிலும் அதிருப்தி பரவுகின்றது.

இதனால் மிகவும் பாதிப்புக்குள்ளானவர் கள் எகிப்திய ஃபல்லாஹீன்கள் (விவசாயிகள்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களது உற்பத்தியை ஐரோப்பிய வட்டியா ளர்கள் அரைவிலைக்கும், கால் விலைக்கும் பிடுங்கிக் கொள்கின்றனர். வரி வசூலிப்பாளனின் குர்பாஷ் (காண்டா மிருகத் தோலினாலான ஐந்து புரிகள் கொண்ட சாட்டை) ஈவிரக்கமின்றி ஃபல்லாஹீன்கள் உடலெங்கும் இரத்தக் கோடுகளை வரைகின்றன. அதிகாரத்திலிருந்த பாஷாக்களின் உதவியுடன் விவசாயிகளைப் பட்டினிபோட்டு உறிஞ்சப்பட்ட உழைப்பு கோடிக் கணக்கான பிராங்குகளாக ஐரோப்பிய வங்கி களின் கஜானாவை நிரப்புகின்றது.

நகர்ப்புற மக்களும் பாதிக்கப்படு கின்றனர். வர்த்தகம் ஸ்தம்பிக்கின்றது. கைவினைத் தொழிலாளர்களது உற்பத்திப் பொருட்களின் சந்தை சரிகின்றது. இராணுவத்தில் உயர்ப்பதவிகளில் அமர்த்தப்பட்ட துருக்கி - சிர்கேசிய பாஷாக்கள் உயர்ந்த சம்பளம் பெற, நடுத்தர அதிகாரிகளும் வீரர்களும் படைக் குறைப்பு, சம்பளக்குறைப்பு, வழங்கப்படாத சம்பளப் பாக்கி முதலியனவற்றால் பாதிக்கப் படுகின்றனர். ஐரோப்பிய கடன் பளுவின் ஒரு பகுதியை நிலச்சுவான்களும் சுமக்க நேர்வதால் அவர்கள் மத்தியிலும் அதிருப்தி தலைதூக்கு கின்றது. எகிப்து எரிமலையாய்க் குமுறத் தொடங்குகிறது.

எத்தியோப்பிய யுத்தத்தின் பின் எகிப்தில் இராணுவ அதிகாரிகளின் இரகசிய அமைப் பொன்று உருவாகின்றது. இவர்கள் தம்மை 'வத்தனியூன்கள்' (தேசாபிமானிகள்) எனக் கூறிக் கொள்கின்றனர். எகிப்து எகிப்தியருக்கே என்ற குரலையெழுப்பி எகிப்து மக்களை சுதந்திர அரசாக இயங்கும் தேசமாக முன்மொழிந்த



வர்கள் இவர்களே. இவர்களின் தலைவர் தான் கர்னல் அஹமத் அரபி (1839-1911)

எகிப்தியக் கிராமமொன்றில் விவசாயி யின் மகனாகப் பிறந்த அரபி பாஷா அல் அஸ்ஹரில் கல்வி கற்று இராணுவத்தில் சேர்ந்தவர். தன்னையோர் ஃபல்லாஹ் (விவசாயி) எனக் கூறிக்கொள்வதில் பெருமையடைந்தவர். பிரெஞ்சுப் புரட்சியினதும் இத்தாலிய விடுதலைப் போராட்டத்தினதும் வரலாற்றனுபவங்களை உள்வாங்கிய ஆழ்ந்த தேசபக்தராக விளங்கிய அரபியின் செல்வாக்கு இராணுவ அதிகாரிகள், வீரர்கள் மத்தியில் வேகமாகப் பரவுகின்றது.

வத்தனியூன்களுடன் கருத்தியல் தளத்தில் இயங்கிய அறிவு ஜீவிகள் மத்தியில் ஷெய்க் முஹம்மத் அப்துஹ் முக்கியமானவர். நவீனமாற்றங்களை எதிர்கொள்ளும் வகையில் இஸ்லாமிய சீர்த்திருத்தம் பற்றி கனவு கண்டவர் அப்துஹ். மற்றொருவர் அறிவு ஜீவிகள் மத்தியில் தாக்கத்தை யுண்டுபண்ணிய ஜமாலுதீன் ஆஃப்கானி. அரபி பாஷாவும் அவரது நண்பர் களும் தம்மை ஆஃப்கானியின் சீடர்கள் என்கின்றனர். அதெப் இஸ்ஹாக்கும், ஸலீம் நக்காசும் வெளியிடத் தொடங்கியிருந்த 'மிஸ்ர்' என்ற சஞ்சிகையிலும், 'அத்திகாரா' (வர்த்தகம்) பத்திரிகையிலும் எகிப்தின் கெதீமுக்கும், ஏகாதிபத்திய ஒடுக்கு முறைக்கும் எதிராக ஆஃப்கானி போன்றோரின் காரசாரமான எழுத்துக் கள் பிரசுரமாகின்றன. ஆஃப்கானி 1878ல் எகிப்திலிருந்து வெளியேற்றப்படுகிறார். அரபிப் புரட்சியில் சம்பந்தப்பட்டிருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு பின்னர் அப்துஹ்வும் நாடுகடத்த ப்பட்டார். அப்துஹ் பாரிசிலும், பெய்ருத்திலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுனிசியாவிலும் தீவாந்திர வாசத்தைக் கழித்தவர்.

1880 இல் எகிப்தின் தேசிய இயக்கத்தில் புதிய சக்திகள் மேற்கிளம்புகின்றன. ஷெரீ∴ப் பாஷா போன்ற மிதவாதிகள் ஐரோப்பிய முதலாளிகளோடு சமரசப் போக்கைக் கடைப் பிடித்து அரசியல் யாப்புக்குட்பட்ட முடியாட் சியை ஆதரித்து நிற்க, அரபியும் அவரது சகாக்களும் கெதீமுடையவும், துருக்கி - சிர்க்கேசிய எஜமான வர்க்கத்தினருடையவும் அதிகாரத்துக்கு முடிவுகட்டி ஜனநாயக அரசாங்கம் ஒன்றை அமைக்கும் தீவிர போராட்ட த்தை முன்னெடுக்கின்றனர்.

ஏகாதிபத்திய ஒடுக்கு முறைக்கெதிரான போராட்டம் உச்சமடைகின்றது. கெதீம் இஸ்மாயில் வேறுவழியின்றி 'ஐரோப்பிய மந்திரிசபை'யைக் கலைக்கின்றார். ஷெரீ∴ப் பாஷா தலைமையில் தேசிய அரசாங்கமொன்று அமைக்கப்படுகின்றது. நிர்வாக யந்திரத்தில் அங்கம் வகித்த ஐரோப்பிய அதிகாரிகள் நீக்கப்படுகின்றனர். புதிய அரசியல் யாப்பொன்று தயாராகிக்கொண்டிருக்கையில் ஏகாதிபத்திய சதியால் கெதீம் இஸ்மாயில் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டு, பிரிட்டனின் கைப்பாவையான கெதீம் தவ்∴பீக் ஆட்சிபீடத்தில் அமர்த்தப் படுகின்றார். கெதீம் தவ்∴பீக் புதிய யாப்பில் கைச்சாத்திட மறுத்துவிடுவதோடு, பிரெஞ்சு, பிரிட்டிஷ் நலன் பேணும் இரு கட்டுப்பாட்டாளர் சபையை மீண்டும் இயங்கச் செய்கிறார். ஷெரீ∴ப் பாஷாவின் அரசாங்கம் கலைக்கப்பட்டு, பிரிட்டிஷ் அடிவருடியான ரியாஸ் பாஷா பிரதமராக்கப்படுகின்றார். ஐரோப்பிய நிதி கட்டுப்பாட்டாளர்களதும், ஐரோப்பியர் அங்கம்



வகித்த கெதீமிய கடன் விசாரணை சபையி னதும் ஏகாதிபத்திய தர்பார் தொடங்குகின்றது. கெதீம் தவ்∴பீக்கின் எதேச்சதிகாரப் பேயாட்சி தலைவிரித்தாடுகின்றது.

கெதீமுக்குச் சொந்தமான பெருந் தோட்டங்களில் இராணுவத்தினர் கட்டாய உழைப்பில் ஈடுபடுத்தப்படல், சம்பளம் வழங்கப் படாமை முதலியவற்றுக்கெதிராக வத்தனியூன் அதிகாரிகள் குழுவொன்று இராணுவ அமைச்சர் உதுமான் ரி∴ப்கியிடம் முறையீடொன்றைச் சமர்ப்பிக்கின்றது. ரி∴ப்கி அதனை உதாசீனஞ் செய்து, துருக்கி - சிர்கேசிய அதிகாரிகளை இராணுவ உயர்பதவிகளில் அமர்த்துகிறார்.

இம்முறைகேடான இராணுவப் பதவி உயர்வுகள் குறித்து விசாரணை புரியுமாறும், உதுமான் ரி∴ப்கியை இராணுவ அமைச்சர் பதவியிலிருந்து நீக்குமாறும் நாலாவது படைப் பிரிவின் கமாண்டர் அரபி பாஷா கர்னல் அப்துல் ஆல், கர்னல் அலி ∴பஹ்மி மூவரும் பிரதமர் ரியாஸ் பாஷாவிடம் கோரிக்கை விடுக்கின்றனர். பிரதமரோ ஐரோப்பிய நிதிக் கட்டுப்பாட்டாளர் களிடம் ஆலோசனை கேட்கிறார். மூவரையும் கைது செய்யுமாறு அவர்கள் பிரதமரை நிர்ப்பந்திக்கின்றனர். அரபியும், அப்துல் ஆலும், அலி ∴பஹ்மியும் தந்திரமாக இராணுவ அமைச்சுக்கு வரவழைக்கப்பட்டு அங்கு கைது செய்யப்பட்டு இராணுவ நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்படுகின்றனர். இவர்களுக்கெதிராகச் சதி வலை விரிக்கப்படுவதை ஏலவே அறிந் திருந்த படைவீரர்கள் இராணுவ அமைச்சைச் சூழ்ந்துக்கொள்கின்றனர். இராணுவ நீதிமன்றத்தி னுள் நுழைந்து மூவருக்கெதிரான போலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரணையைத் தடுத்து நிறுத்துகின்றனர். இராணுவ அமைச்சர் உதுமான் ரி∴ப்கி ஜன்னல் வழியாகப் பாய்ந்து தப்பிச் செல்கிறார். இராணுவத்தினர் அரபியையும், அப்துல் ஆலையும், அலி ∴பஹ்மியையும் தோள்களில் சுமந்து கெதீமின் மாளிகைக்குச் செல்கின்றனர். நிலைமை மோசமடைந்து விட்டதைக் கண்டு பீதியடைந்த கெதீம் இராணுவத்தினரின் கோரிக்கைகளுக்கு இணங்குகிறார். உதுமான் ரி∴ப்கி பதவி விலக்கப்பட்டு, கவிஞர் மஹ்மூத் ஸமி - அல் பருதி இராணுவ அமைச்சராக நியமிக்கப்படுகின்றார். இராணுவ ஊழல்கள் குறித்து விசாரிப்பதற்கு அரபி பாஷா அங்கம் வகிக்கும் ஆணைக்குழு நியமிக்கப்படுகின்றது.

எனினும், அமைச்சரவை அதிகாரம் ரியாஸ் பாஷாவிடமே இருந்ததால் ஐரோப்பிய நிதிக்கட்டுப்பாட்டாளரின் கொட்டம் அடங்க வில்லை. கெதீம் தவ்∴பீக்கின் கொடுங்கோன்மை தொடர்கின்றது. இராணுவத்தின் ஆரவாரம் அடங்கியதும், கெதீம் திடீரென மஹ்மூத் ஸமியை பதவியிலிருந்து நீக்கிவிட்டு வத்தனி யூன்களைப் பலிவாங்க வியூகம் வகுக்கிறார். கெய்ரோவில் மையம் கொண்டிருந்த புரட்சிப் படைப் பிரிவைக் கலைத்துவிட்டு, அதிகாரி களையும் வீரர்களையும் மாகாணங்களுக்கு வெளியேறுமாறு ஆணை பிறப்பிக்கப் படுகின்றது. இவ்வாணையை எதிர்த்து 1881 செப்டம்பர் 9ல் இராணுவக் கலகம் மூள்கின்றது. இராணு வத்தினர் ஆப்தீன் மாளிகையை முற்றுகை இடுகின்றனர். ரியாஸ் பாஷாவின் மந்திரிச் சபை உடனடியாகக் கலைக்கப்படல் வேண்டும். இராணுவத்தினர் தொகை அதிகரிக்கப்படல் வேண்டும். அரசியல் யாப்பு வேண்டும் என



கோரிக்கைகள் முன்வைக்கப் படுகின்றன. இராணுவக் கலகத்தை அடக்குவதற்குக் கடுமையான பதில் நடவடிக்கை எடுக்குமாறு பிரிட்டிஷ் அதிகாரியான கட்டுப்பாட்டாளர் நாயகம் கெதீமை வற்புறுத்துகின்றார். கெதீம் அஞ்சி நடுங்கவும், பிரிட்டிஷ் அதிகாரியே அரபியுடன் நேரடிப் பேச்சுவார்த்தையில் இறங்க வேண்டி ஏற்படுகின்றது. ஷெரீ∴ப் பாஷாவை மீண்டும் பிரதமராக நியமிப்பதென்றும் ஏனைய விவகாரங்கள் குறித்து துருக்கி சுல்தானின் ஆலோசனையைப் பெறுவதென்றும் முடிவா கின்றது.

கலகக்காரரின் ஆதரவுடன் பிரதமராவ தற்கு ஷெரீ∴ப் பாஷா பின்வாங்குகிறார். எனினும் பிரிட்டனினதும் பிரான்சினதும் நிர்ப்பந்தத்தால் புரட்சி இராணுவம் கெய்ரோவிலிருந்து வெளியே றப்படல் வேண்டுமென்ற நிபந்தனையுடன் பதவியேற்கின்றார். ஏகாதிபத்திய இருகட்டுப் பாட்டாளர்ச் சபைக்குப் பாதுகாப்பு வழங்குகிறார். ஷெரீ∴ப் பாஷாவின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரபி பாஷா பிரதானிகளின் சபையின் உதவியை நாடுகின்றார். அச்சபையும் ஷெரீ∴ப் பாஷாவின் பக்கம் சாய்ந்தமையால், புரட்சிப் படையைக் கெய்ரோவில் இருந்து அப்புறப்படுத்துவதற்கு அரபி இசைய வேண்டி வருகிறது.

அதேவேளை, செப்டம்பரில் நடந்த இராணுவக் கலகத்துக்குப் பதிலடி கொடுக்க ஐரோப்பிய அரசுகள் ஆயுதத்தலையீட்டுக்கு ஆயத்தமாகின்றன. எகிப்து மீது கூட்டு இராணு வக் கட்டுப்பாட்டைக் கொணர விரும்புகிறது பிரான்சு. ஆறு நாடுகளின் கூட்டுத் தலையீட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்மொழிகின்றது இத்தாலி. நெருக்கடி நிலையைச் சாதகமாக்கிக் கொண்டு பிரெஞ்சு, பிரிட்டிஷ் போர்க்கப்பல்கள் அலெக்சாந்திரியா வுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. புரட்சி இராணுவத்தை ஒடுக்குவதற்குத் தருணம் பார்த்திருந்த ஷெரீ.்.ப் பாஷா, அரபி பாஷா வுடையவும் அப்துல் ஆல் உடையவும் படைப்பிரிவுகளை தமியெத்தாவுக்கும் தல் அல்கபீருக்கும் இடம்பெயரும்படி கட்டளை இடுகின்றார்.

இதற்கெதிராகக் கெய்ரோவில் ஆர்ப் பாட்டங்களும், கண்டனங்களும் வெடித்துக் கிளம்புகின்றன. அரபியின் படைப்பிரிவு கெய்ரோவிலிருந்து வெளியேறிச் செல்கையில், எல்லாவிடங்களிலும் மக்கள் திரண்டு வந்து அரபிக்கு வரவேற்பளிக்கின்றனர். அரபியின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர். திரண்ட மக்கள் சக்தி தன் பின்னாலிருப்பதை அரபி உணர்கின்றார். அரபியே வெகுசன ஆதரவு பெற்ற மக்கள் தலைவர் என்ற உண்மை பிரத்தியட்சமாகின்றது. இத்தகைய சூழலில் அரபி மாகாணங்களில் ஒதுங்கியிருக்க விரும்பவில்லை. மனைவியின் சுகயீனத்தைக் காரணம் காட்டி கெய்ரோவுக்குத் திரும்புகிறார்.

உத்தியோக நலன்களுக்காக இராணு வத்தினுள் சீர்த்திருத்தம் வேண்டித் தொடங்கப் பட்ட அரபியின் போராட்டம் அந்நிய ஏகாதிபத்தி யத்திற்கு எதிரான விடுதலைப் போராட்டமாக மாறுகின்றது.

எகிப்தில் தலையிடுவது சம்பந்தமாய் ஒரு இணக்கமான முடிவுக்கு வர முடியாது



போன பிரிட்டன், அரபி பாஷாவுக்குப் பெருகி வரும் மக்கள் ஆதரவு கண்டு மலைத்துப் போய் தனது தந்திரோபாயத்தை மாற்றிக் கொள்ள விளைகிறது. வத்தனியூன்களின் விடுதலை உணர்வும் அபிலாஷைகளும் பிரிட்டனின் தேசிய பாரம்பர்யங்களுக்கு விரோதமானவையல்ல என்றும், அந்நிய சக்திகளின் ஆதரவை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கத்தை பிரிட்டனும் எதிர்ப்பதாகவும் கூறி, எகிப்தில் அராஜக நிலை தோன்றினால் மட்டுமே பிரிட்டனின் இந்நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படக் கூடுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

இவ்வேளை இராணுவத்தின் அதிகாரங் களைக் கட்டுப்படுத்துவதற்காக ஷெரீ.்.ப் பாஷா பிரதானிகள் சபையின் தயவை நாடுகின்றார். அரபியும் வத்தனியூன்களும் அரசியல் யாப்பு நிறைவேற்றப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்து நின்றபோதும், இரு வருடங்களுக்கு முன் தன்னால் தயாரிக்கப்பட்ட அதே அரசியல் யாப்பை நிறைவேற்ற மறுத்து விடுகிறார் ஷெரீ.்.ப் பாஷா.

ஷெரீ.்.பின் நெருங்கிய நண்பரான சுல்தான் பாஷாவைத் தலைவராகக் கொண்ட பிரதானிகள் சபை கெதீமுக்குச் சார்பானதாய் விளங்கியபோதும், எகிப்தின் வரவு செலவு திட்டத்தின் மீது வாக்களிக்க உரிமை கோரியபடியால் ஏகாதிபத்திய சக்திகளின் கோபத்தைச் சம்பாதிக்க நேர்கிறது. இவ்வுரிமை கோரல் அந்நிய நிதிகட்டுப்பாட்டுச் சபையின் விவகாரங்களில் தலையிடும் அத்துமீறலாகக் கருதப்படுகின்றது. இவ்விவகாரம் குறித்து பிரிட்டனோடும் பிரான்ஸோடும் பேச்சுவார்த்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்துமாறு பிரதானிகள் சபையை நிர்ப்பந்திக்கின்றார் ஷெரீ∴ப். எகிப்தின் வரவு செலவு திட்டத்தின் மீது வாக்களிக்கும் உரிமை அந்நிய சக்திகளுடன் பேசித் தீர்க்க வேண்டிய விவகாரமன்று எனப் பிரதானிகள் சபையினர் கொதித்தெழுகின்றனர். இதனால் ஷெரீ∴பின் மந்திரிசபை ராஜிநாமா செய்ய வேண்டி வருகிறது.

1882 பெப்ருவரி 15ல் வத்தனியூன் தலைவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அரசாங்கமொன்று அமைக்கப்படுகின்றது. ஷெரீபின் அரசாங்கத்தில் இராணுவ அமைச்சராக இருந்த மஹ்மூத் ஸமி அல் பருதி இப்புரட்சி அரசாங்கத்தின் பிரதமராகின்றார். அரபி பாஷா இராணுவ அமைச்சராகப் பதவியேற்கிறார். பருதியின் புரட்சி அரசாங்கம் ஏகாதிபத்திய நலன் பேணும் இரு கட்டுப்பாட்டாளர் சபையைக் கலைக்கவே பிரெஞ்சு அதிகாரி அதனை ஆட்சேபித்து எகிப்தை விட்டு வெளியேறுகிறார். அந்நிய ஆலோசனையினதும் ஐரோப்பிய நிபுணர்களினதும் மோசடிகள், பதவித் துஷ்பிரயோகங்கள் முதலியவற்றுக்கெதிராக புரட்சி அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி ஏற்படுகின்றது. விவசாய இயக்கம் மேற்கிளம்பி, ∴பல்லாஹீன்களை உறிஞ்சிய ஐரோப்பிய கடன் திட்டங்களை நீக்கும்படியும், அடகு வைக்கப்பட்ட நிலங்களை ∴பல்லாஹீன்களிடம் திருப்பியளிக்கும்படியும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன.

விவசாயிகளின் எழுச்சி வத்தனியூன்களுடனிருந்த நில எஜமானர்களை வலதுசாரி பிற்போக்கு முகாமுக்குத் தள்ளி விடுகின்றது.



இப்பிற்போக்குக் கும்பல் சதிச் செயல்களில் இறங்குகின்றது. அரபி பாஷாவைக் கொலைச் செய்வதற்கான பயங்கரச் சதி அம்பலமாகி, மாஜி இராணுவ அமைச்சர் உதுமான் ரி∴ப்கி உட்பட ஐம்பது பேர் கைது செய்யப்படுகின்றனர். இராணுவ நீதிமன்ற விசாரணையில் இவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்ட போதும் கடுந்தண்டனை வழங்கப்படாமல், சூடானுக்கு நாடுகடத்தப்பட வேண்டுமெனத் தீர்ப்பு வழங்கப் படுகின்றது. எனினும் பிரெஞ்சு, பிரிட்டிஷ் தூதுவர்களின் தலையீட்டினால் குற்றவாளிகள் நாடுகடத்தப்படுவதற்குப் பதிலாக கெய்ரோவில் இருந்து வெளிமாகாணங்களுக்கு வெளியேற்றப்படல் வேண்டுமென கெதீம் கட்டளை இடுகிறார்.

இத்தண்டனை மாற்றம் வத்தனியூன்களுக்கும், புரட்சி அரசாங்கத்துக்கும் விடுக்கப்பட்ட சவாலாகும். வத்தனியூன்கள் இதனை நேரடி மோதலுக்கான சமிக்ஞையாகக் கொள்கின்றனர். கெதீம் தவ்∴பீக்கை ஆட்சியிலிருந்து கவிழ்க்க முடிவுசெய்கின்றனர். பிரதானிகளின் சபை கூட்டப்படுகின்றது. அரச பரம்பரையினரின் ஆட்சிக்கு முடிவுகட்டவும், கெதீமை ஆட்சியில் இருந்து நீக்கவும் அரபி அறைகூவல் விடுக்கின்றார். பிரதானிகள் சபை தயக்கம் காட்டுகின்றது. பிரதானிகள் கெதீமின் அனுதாபிகளாயிருந்த போதிலும், அரபிக்கும் இராணுவத்துக்கும் பயந்து வெளிப்படையாக கெதீமை ஆதரிக்க முன்வராமல் நடுநிலை வகிக்க முடிவு செய்கின்றனர்.

பிரதானிகள் சபைக் கூட்டம் சட்ட விரோதமானதென்றும் இச்சபை கலைக்கப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டதாகவும் கெதீம் அறிவிக்கின்றார். இதனை ஆட்சேபித்து மஹ்மூத் ஸமி பதவி விலகுகின்றார். பிரிட்டன் எதிர்பார்த்ததும் இதனைத்தான். ஆயினும் மாற்று அரசாங்கமொன்றை அமைக்க எவரும் முன் வராதபடியால் ஸமியைத் தொடர்ந்து பதவியில் வைத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தமேற்படுகின்றது. எனினும் பிரிட்டனும் பிரான்சும் மஹ்மூத் ஸமியின் அரசாங்கத்தை கலைக்குமாறு பிடிவாதஞ் செய்ய, கெதீம் அதற்குப் பணிகின்றார். கெதீம் அந்நிய ஏஜண்டாக செயல் பட்டதனை எதிர்த்து மக்கள் ஆர்த்தெழுகின்றனர். நாடு பூராவும் கண்டனக் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடைபெறு கின்றன. கெதீமின் ஆட்சி ஆட்டம் காண்கின்றது. அரபியை மட்டும் பதவியில் வைத்திருக்க முன்வருகின்றார் கெதீம். ஆனால் திரண்டெழுந்த மக்கள் சக்தி அரபியின் பின்னால் இருப்பதால் அரபி ஏலவே எகிப்தின் முடிசூடா மன்னனாய்த் திகழ்கின்றார்.

சமயம் பார்த்து பிற்போக்குச் சக்திகள் அலெக்சாந்திரியாவில் கலவரத்தைத் தூண்டி விடுகின்றன. இதனைப் பயன்படுத்தி பிரிட்டிஷ் போர்க் கப்பல்கள் அலெக்ஸாந்திரியா மீது குண்டுத் தாக்குதலைத் தொடங்குகின்றன. ஆங்கிலோ - எகிப்து யுத்தம் ஆரம்பமாகின்றது.

கெதீமும் அவரது அடிவருடிகளும் ஆங்கிலேயர் பக்கம் சேர்ந்துக் கொள்கின்றனர். பிரிட்டனுக்கு எதிரான யுத்தத்தினை நிறுத்துமாறு கெதீம் ஆணைப் பிறப்பிக்கின்றார். யுத்தம் மூண்ட பின் சமரசத்திற்கு இடமில்லை. காட்டிக் கொடு க்கும் துரோகிகள் கடுமையாகத் தண்டிக்கப் படுவர் என அரபி அறிவிக்கின்றார்.



அரபி பாஷா சட்டத்தின் முன் குற்ற வாளியெனவும், இராணுவ அமைச்சர் பதவியில் இருந்து விலக்கப்பட்டு விட்டதாகவும் கெதீம் மக்களுக்கு அறிவித்தல் விடுத்த போதும், அரபி அதனையிட்டு அலட்டிக் கொள்ளாமல் பாதுகாப்புப் படையைத் திரட்டுவதிலும், பாது காப்பைப் பலப்படுத்துவதிலும் தீவிரமாக ஈடுபடுகின்றார். ∴பல்லாஹீன்கள் பல்லாயிரக் கணக்கில் படையில் சேர்கின்றனர். துரோகக் கும்பலென வத்தனியூன்களினால் வர்ணிக்கப் பட்ட ராகெப் பாஷாவின் அரசாங்கம் அலெக்ஸா ந்தரியாவில் போய் குந்திக் கொள்கிறது. கெய்ரோவில் புரட்சி அரசு, அவசரகாலச் சபை, இராணுவச் சபை முதலியன அமைக்கப் படுகின்றன.

இராணுவச்சபை வத்தனியூன்களைக் கொண்டிருந்தது. அவசரகாலச் சபையில் உலமாக்களும், ஷெய்குகளும், கெய்ரோவில் தங்கிவிட்ட பிரதானிகள் சபை உறுப்பினர் சிலரும் இருந்தனர். இவர்களது ஆதரவு கெதீமுக்கும் அரபிக்குமிடையில் ஊசலாடிக் கொண்டிருந்தது. சிலர் அலெக்ஸாந்திரியாவுக்கு ஓடிவிடுகின்றனர். எஞ்சியோர் கெய்ரோவில் தங்கியிருந்து இராணுவத்தினுள் சீர்குலைவை உண்டு பண்ணும் பிரயத்தனங்களில் ஈடுபடு கின்றனர்.

ஆங்கிலோ - எகிப்து யுத்தத்தின் இறுதி நடவடிக்கையாக பிரிட்டிஷ் இராணுவம் தல் அல் கபீருக்கு அருகாமையிலுள்ள எகிப்திய படைமீது திடீர் தாக்குதல் தொடுக்கின்றது. 1882 செப்டம்பர் 13ல் தல் அல் கபீர் சண்டையில் வத்தனியூன்கள் முறியடிக்கப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வாங்கிய படைத்துருப்புக்களை மீண்டும் திரட்டுவதற்காக அரபி கெய்ரோவுக்கு விரைகின்றார். கெய்ரோவில் பாதுகாப்பு பலப்படுத்தப்படுகின்றது. கெய்ரோவைச் சுற்றியுள்ள பகுதிகளில் இராணுவப் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு அப்துல் ஆலும், மஹ்மூத் ஸமி அல் பருதியும் முன்வருகின்றனர்.

ஆனால் அவசரகாலச் சபையிலிருந்த எஜமான வர்க்கத்தினர் பிரிட்டனிடம் சரணடைவதற்கு முடிவெடுக்கின்றனர். துரதிஷ்டவசமாக அரபி பாஷாவும் அவசரகால சபையின் முடிவுக்குக் கட்டுப்பட்டு விடுகிறார். அலெக்ஸாந்திரியாவையும் சூயஸ்கால்வாய்ப் பகுதியையும் மட்டுமே அதுவரை பிரிட்டிஷ் கைப்பற்றியிருந்தது. எதிர்த்து போரிடுவதற்கான சாத்தியப்பாடுகள் இருந்தபோதிலும், அவசரகால சபையின் தீர்மானத்தால் எதிர்த்தாக்குதல்கள் யாவும் கைவிடப்படுகின்றன. க.்.பர் அத்தவார், அபூகீர், தமியெத்தா முதலிய பகுதிகளிலும் படையினர் ஆயுதங்களைக் கீழே போடுகின்றனர். இவ்வாறு பிரிட்டனின் படைப்பலத்தினாலன்றி, ஏகாதியபத்தியத்துக்கு உடந்தையாகச் செயல்பட்ட உள்ளூர் நயவஞ்சகக் கும்பலின் துரோகச் செயல்களால் எகிப்து ஆங்கிலேயர் வசமாகின்றது.

அரபி மீதும் அவர் சகாக்கள் மீதும் மரணதண்டனை விதிக்கப்பட்டபோதிலும் மக்கள் எழுச்சிக்குப் பயந்து அவர்களை நாடுகடத்துவதென முடிவாகின்றது. குடியேற்றநாடுகளில் ஒன்றாக விளங்கிய இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டு ஸய்லான், ஷரந்தீப் என நம் முன்னோர் போற்றிய பாவா ஆதம் (அலை) யின் பாதம் பட்ட பூமியில் புகலிடந்தேடி,



அரபியும் அவரது சகாக்களும் எமது மண்ணில் கால் வைக்கின்றனர்.

- ஸய்யத் முஹம்மத் ஃபாரூக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ மிஸ்று தேசமே........

பாரிக்கின்
நள்ளிரவு வானில்
எமக்காகப்
பரவிய சுடரொளி

மின்னல் தெறிப்பா
உடைவாளின் பளபளப்பா?

குதிரைகளில் மீதுற்றோர்
குனிந்த
கழுத்துக்கள்

வேதனைப்
பெருமூச்சும்
வேட்கையுறு
பார்வையுமாய்-

படர்ந்த அவ் வொளிதனைப்
புனிதமுடன்
பணிந்தனவால்

காதலர்கள்
மறைப்பதற்குக்
கடிது முயல்
ஏக்கத்தைக்

■ பாரிக் - பல இடங்களின் பெயர். ஓரிடம் பஸ்ராவுக்கு அருகாமையிலும், ஏனைய இடங்கள் அரேபியாவிலும் காணப்படுவன. இங்கு இது எகிப்து நாட்டைக் குறிக்கும் உருவகம்.



காட்டிப் பளிச்சிடுது
மின்னலின் இயக்கம்.

இருதயத் துடிப்புணர்த்த
மார்பைப் பிளந்திடுது
இரு விழிகள் புனல் பாய
இமைகளைப் பெயர்த்திடுது.

காதலின் வேட்கை
அறிகிலா மூடர்
காதலின் ரகசியம்

அறிதல் எவ்வாறு?

பிரிவுத் துயரால்
பிசனியுறாப்
பேதையர்
பிரிவின் ஏக்கத்தைப்

புரிதல் எவ்வாறு?

வேட்கையின்
உயிர்ப்பில்
உறுதியாய்ச் சொல்லுகிறேன்-

பிரிவால் மெலிந்து
நலிவுற்ற
நாள் முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீறியெழும் உணர்ச்சிகளால்
உன்மத்த மாயிருந்தேன்.
தீவாந் திரவாசம்
சரந்தீபம் வந்ததால்
ஒட்டிய ஆடைகள்
உதிர்ந்தன
எனை விட்டு.

விளையும் மாண்புகள்
விரும்பு வோர் யாரெனினும்
விதியை யெதிர் கொள்ளும்
வலிமை
எய்திடனும்
அச்சம் களைந்து
வரும்
ஆபத்தில் குதித்திடனும்.

நானருந்தும்
புனல் நீர்
நாட்கள்
சேறாக்கிடினும்,

கொல்லவருந் துன்பங்கள்
கூர் மழுக்க
முனைந்திடினும்

சரந்தீபம் - ஷரந்தீப், இலங்கையை அரபிகள் ஷரந்தீப் என அழைத்தனர்.



சோதனை கண்டு
நான்
சோர்ந்து விடவில்லை.

விதியின் சூதில்
நான்
வீழ்ந்து விடவில்லை

கொடுஞ் சத்து ராதிகளின்
கோபாக்கினி பொங்க
துணிவிதனைக் கண்டு
என்
தோழர்கள் தெம்படைய
குதூகலமாய் நானும்
குதித்திட்டேன் போரில்.

விசுவாசமான வோர்
நண்பனை
நான் பிரிந்து
தூரத்தி லாய் விட்டத்
துயரமிது போன்றுதான்

வஞ்சக எதிரியை
விலகி வந்த
மனக்களிப்பும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனோ டிதனைச்
சமப்படுத்திப்
பார்த்திரேல்-

மனிதரிடம் தப்புவதும்
மகத்தான பரிசுதான்
உலகம் என்பது
வஞ்சகரின் வலை விரிப்பே

உண்மையின் நெற்றியில்
ஒளிரு மொரு
நன் முத்து
நான் என்ப தறியாமல்
நாசமுறச்
சபிக்கின்றீர்:

வாயில் தூசணமாய்
வார்த்தைகளைக் கொட்டுகிறீர்

மாண் பிழந்து
சிறுமையுற்று
மானஞ் சிறிது மற்று
அற்பச் செயல்களில்
நீர்
ஆனந்தம் காண்கிறீர்.



ஊத்தை மொழியால் தான்
உன்னதத்தைக் காண்பீரோ?

ஊளையிடும் மூடர்கள்
உணர்ச்சி பெறல்
எவ்வாறு?

அடக்கு முறையை
ஏற்காது
என் ஆன்மா.
அடங்கிக் கிடக்கும்
அப்பாவி
நானல்லன்.

பெருமை தரும் வழியில்
போராட நில்லாதான்
அருமைப் புவி வாழ்வை
அவமாகச் செய்கின்றான்.

கூடாரங்கள் தோறும்
கூத்துக்கள் மத்தியில்
பருவப் பெண்கள் நடுவே
பயனற்று மடிகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடர்கள் வரும் போது
இடுப்புப் பட்டியை
இறுக்கிக் கொண் டெழாதான்
இருந்து பயனென்ன?

சூனியத்தை குடியோட்டும்
சுடர் நெஞ்சப்
பேருறுதி
கொண்டவனே
வாழ்வின்
கொடு முடியைத்
தொட முடியும்.

கட்டுப் பாடின்றிக்
கலகம் புரிந்த தாய்
சனங்கள் கடிகின்றார்
உண்மை
அதுவன்று
என்னியல்பு
அதுவன்று.

நீதிப் பிரகடனம்
நெஞ்சார முழக்கினேன்:
அல்லாஹ்வின் திருப்திக்காய்
அறவழியில் நின்றேன்:



உரிமைகள் காக்க
ஊமைகளை
உசுப்பிவிட்டேன்.

நேர்மையை ★
மதிப்பவன் நான் -
நேர்மை யில்லாதவற்றை
நீசத் தனத்தை
நிராகரித் தொதுக்குபவன்.
- படைப் பினங்கள் யாவுக்கும்
இறை வகுத்த
நீதியிது.

பணியாமையே
எனது
நிலைப்பாடு என்றிடில் - அப்
பணியாமையால் - இறையைப்
பணிய
அவாவுற்றேன்.

சரியான வழிகாட்டல்
வேண்டிய மனிதருக்குத்
தெளிவானத் தீர்வு
**அதில்**
உண்டென தெரிந்ததனால்

★ அல்குர்ஆன் வழி நிலைப்பாடு.
**அதில்** - 1882ல் மஹ்மூத் ஸமியின் மந்திரிசபை செய்த யாப்பு பிரகடனத்தைச் சுட்டுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசனைக்கு
அழைத்ததுவும்
தவறாமோ?

வீணர் செயல் கண்டு
வாளா விருப்பவன்
சுதந்திரமும்
சுகவாழ்வும்
சுகிக்கப் பெறுவானோ?

வேச மிடும் நீசர்களின்
ஆசாரப் பொய்மைகளில்
அமுங்கிக் கிடப்பதற்கு
அல்ஹம்து லில்லாஹ்-
நான்
ஆசாட பூதி யல்லன்.

ஆலோசனை வழங்கி
ஆனவரை முயற்சித்தேன்.

உண்மை விளம்பியின்
உறுதி மொழி யேற்காத
நயவஞ்சகருக்கு
நானெடுத்துச் சொல்வதற்குப்
பட்டதுயர்
கஸ்டமெல்லாம்
சொல்லுதற்கு எளிதாமோ?

---

**நயவஞ்சகர்** - எகிப்திய விவகாரங்களுக்குப் பொறுப்பாகவிருந்த துருக்க - சிர்கேசிய அதிகாரிகள்.



வன்முறையால்
மக்களை
வசப்படுத்தி யாள்வதற்கு
நப்பாசை கொண்டு
ஒப்பந்தக் கரங்கள்
கட்டி யெழுப்பியதை
தகர்த்துத்
தவிடு பொடி யாக்கத்
துணிந்திட்டார்
தொடர்ந்தது
அடக்குமுறை.

சிப்பாய்கள் குழுவொன்று ★
ஒடுக்குமுறைக் கெதிராய்ச்
சினங் கொண்டெழுந்தது
கலகக் கொடி தூக்கி.

எழுச்சியுற்ற
எகிப்து மக்கள்
அவர் பின்னால்
அணி திரண்டார்.

வழங்கினாய் மக்களுக்கு
வாக்குறுதி பலவும்
**நாட்டுக் கதிபதியே**
உடனே நிறைவேற்று.

---

★ அரபிக் கிளர்ச்சி
**நாட்டுக் கதிபதி** - கெதீம் தவ்ஃபீக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார் குரலுயர்த்தி
நின்றார் அணிசேர்ந்து

நடந்த வுண்மை யிது
நன்றாக நானறிவேன்
வேறெங்கும் வினவாதீர்
-நானுள்ளேன்
கூறுதற்கு.

மிஸ்றே,
இறையருளால்
உனது நிழல்
நீளட்டும்
இனிய நைல் நீரால்
உனது நிலம்
செழிக்கட்டும்.

இளங்காற்றின் கரம்
எங்கும்
இனிய சுகந்தத்தை
வாழும் உயிர்க்கெல்லாம்
வாரி வழங்கட்டும்.



மிஸ்றே
நீ - என்
மக்களின்
புகலிடம்
குடும்பம், இன பந்துக்கள்
கூடிக் களிக்கு மிடம்
என் இனிய தோழர்கள்
விளையாடும்
மைதானம்
எனது முன்னோர்களின்
வீரம் விளைந்த
களம்.

வாலிபம் வந்ததுவும்
**தாயத்தைத்** தளரவிட்டு
வாளை - என்
தோளில்
தொங்கவிட்டேன்
உன் மண்ணில்.

சிந்தனையென்னும்
**பிஹ்ஸாத்**
தீட்டிய சித்திரமாய்
விழி முன்னால் தோன்றி
வசிய மயக் கூட்டுகிறாய்.

**தாயத்து** - குழந்தைப் பருவத்தில் தீய ஆவிகளிடமிருந்து காவல்பாடு வேண்டி அணியப்படுவது.

**பிஹ்ஸாத்** - நுண்சித்திரங்கள் வரைவதில் வல்லவரான 16ம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரபல பாரசீக ஓவியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதொரு குடும்பத்தை
உதயங்கள் தோறும்
என்
உள்ளத்தைத் தம் நினைவால்
வாட்டுகின்ற
உறவோர்கள்,
நண்பர்கள் யாவரையும்
நானங்கு
விட்டு வந்தேன்.

வாழ்வின் இனிமைகளைப்
பிரிவால் நெகிழவிட்டு
வாலிபத்தையும் அங்கே
வைத்துவிட்டு வந்தேன்
நான்.

பிரிவுத்துயர் வாட்டிப்
பிசைகின்ற
இதயத்தின்
ஏக்கப் பெருமூச்சு
ஏகுமிடம் சேர்வேனோ?

மீண்டும் அவர்களிடம்
மீளும் நாள்
வந்திடுமோ?



பிரிவுத் துயர் நீள
முன்பிருந்த தொடர்புகளின்
பிணைப்புக் கயிறும்

அறுந்து விழக் காண்கின்றேன்.

நாட்களின்
நலிவூட்டும்
வேதனையால் வாடுகையில்
நாயன் கருணையை

நம்பி மன மாறுகிறேன்.

கோணல் மாணலென
ஆன விவகாரமெலாம்
ஒரு நாள் நேர்பட்டு

ஒழுங்காக மாறிடலாம்.

அந்நாளில்
வீரரெல்லாம்
அன்னை மண்

மிதித்திடுவார்.

அந்நாளில்
மீண்டும் நான்
**மிஸ்றே**
உனை யடைவேன்.

■

**மிஸ்று** - எகிப்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சான்றாதாரங்கள்


- Arabic Poetry - A. J. Arberry.
- Modern History of the Arab Countries - V. Lutsky.
- The Egyptian Exiles in ceylon - Sri lanka -Arther C -Dep.
- The Muslim Revivalist Movement 1880 - 1915 - Wijaya Samaraweera
- இலங்கையில் இஸ்லாம் - A. M. A. அஸீஸ்
- இலங்கைக்கு நாடுகடத்தப்பட்ட எகிப்திய கவிஞர் அல் பாருத்
  - கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி (தினகரன் டிசம்பர் 03, 1995)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட தல் அல் கபீர் வீரர் அஹ்மத் ஒறாபி அல் மிஸ்ரி என்ற ஒறாபி பாஷாவும் அவரது சகாக்களும் எகிப்திலிருந்து நாடுகடத்தப்பட்டு இலங்கை மண்ணில் கால் பதித்தமையும் முஸ்லிம்கள் மத்தியில் மறுமலர்ச்சித் தந்தை அறிஞர் சித்திலெப்பை முன்னெடுத்த கல்வி, சமூகச் சீர்திருத்தப்பணி அரபியின் வருகையால் உத்வேகம் பெற்றமையும்,

சுமார் இரு தசாப்தங்கள் இலங்கையில் நீடித்த தீவாந்திரவாசத்தின் போது, அரபி பாஷா அறிஞர் சித்தி லெப்பைக்குப் பக்க பலமாக நின்று முஸ்லிம் கல்வி வளர்ச்சிக்காக அரும்பங்காற்றியமையும் நாமறிந்த சேதிகள்.

எனினும், அரபி பாஷாவுடன் இலங்கையில் தீவாந்திரவாசம் புரிந்த மற்றொரு மகத்தான ஆளுமையான மஹ்மூத் ஸாமி அல் பாரூதி பற்றி நாம் அதிகம் அறிந்திருக்கவில்லை.

அறபு இலக்கிய மறுமலர்ச்சியின் முன்னோடிகளில் ஒருவராகக் கருதப்படும் சிரேஷ்ட கவிஞரான மஹ்மூத் ஸாமி அல் பாரூதி அரசியல் நெருக்கடிகளிலிருந்து ஒதுங்கி வாழ நேர்ந்த காலப்பகுதியில் இலங்கையிலிருந்து எழுதிய எண்ணற்ற அரபுக் கஸீதாக்களின் ஒன்றினது மொழியாக்கம் இது.

ISBN 955-97597-0-1

*Paradise Graphics - 08/575219*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org